## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No. 201/2021

## 24.03.2026

## P.W.1 – விஜயலட்சுமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

50 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. எனக்கு 4 பிள்ளைகள். மூத்த மகன் கணேசன். கணேசன் என் மீது பாக வழக்கு தாக்கல் செய்து கணேசனுக்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து மேற்படி பாக வழக்கு காண்பிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நானோ என் பிள்ளைகளோ அனுபவிக்கவில்லை என்பதாலும் உரிமையில்லை என்பதாலும் மேற்படி பாக வழக்கில் உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.1ல் கண்ட எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெயரில் தாவா சொத்து கூட்டு பட்டா இல்லை என்றால் சரிதான். சின்னவீரத்தேவர் உயிரோடு இருப்பதால் தான் பட்டாவில் என் பெயரை சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது பெயரில் வருவாய் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். நாங்களும் பிரதிவாதிகள் என்பவர்களும் உடன்பிறந்தவர் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வீரமாளின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீரமாளின் பெயரில் வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பரிவர்த்தனை நடந்துள்ளதா என்பதை காண்பிப்பதற்கு வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2 ஏக்கர் 43 செண்டு 1984ல் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனக்கு திருமணத்தின் போது கொடுத்த நகைகளை வைத்து வாங்கினேன் என்றால் சரியல்ல. என்னுடைய

சகோதரி சொத்து கேட்டு வழக்கு போட வில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு அனுபவம் உரிமை இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.24 17:35:21 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.